18th February 1959]

மேலும் வியாபாரிகள் எதாவது தவறுதலாக நடந்து கொண்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

SRI A. GOVINDASAMY : இந்த மண்ணெண்ணெய் விலையேற்றத்தை பயன்படுத்திக்கொண்டு பதுக்கிய வியாபாரிகள் யாரை யாவது அரசாங்கம் கண்டு பிடித்து அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

*THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்த மாதிரி நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலைமை ஏற்படவில்லை.

SRI M. KALYANASUNDARAM : விலையேற்றத்தை தடுப்பதற்கு கன்ட்ரோல் ஏற்படுத்தவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது மொத்த வியாபாரிகளுக்கு 5–1–0 என்று விலை நிர்ணயித்து அதற்கு மேல் டின் ஒன்றுக்கு மூன்று அணு கமிஷனும் கொடுக்கிறார்கள். ஆகவே இவ்விதம் சப்ளை செய்யக்கூடிய கம்பெனியார் இந்த விலைக்கு மேல் விற்கக்கூடாது என்று சொன்னாலும், மொத்த வியாபாரிகள் தங்கள் லாபத்தை பெருக்கிக் கொள்வதற்காக விலையை ஏற்றிவருகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சிற்சில சமயங்களில் இந்த நிலைமை ஏற்படலாம். அதைப்பற்றி அரசாங்கம் அவ்வப்போது கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், இம்மாதிரி பதுக்குகின்றவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னார்கள், அவ்விதம் நடவடிக்கை எடுப்பதற்கு வேண்டிய சட்டம் இல்லையா ? அல்லது சட்டமிருந்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லையா ? இப்போது 15 தினங்களாக நாட்டில் இருந்துவரும் நிலைமையை சமாளிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்போது நடைமுறையில் இதற்கு என்ன சட்டங்கள் எல்லாம் இருக்கின்றன என்று கனம் அங்கத்தினர் அவர்களுக்கு எவ்வளவு தெரியுமோ அந்த அளவு தான் அரசாங்கத்திற்கும் தெரியும். இந்த நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் பற்றாக்குறை ஏற்பட்டதினாலும் சில வியாபாரிகளுடைய நடத்தையும்தான். இதற்கு விசேஷமான நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டிய நிலை ஏற்படவில்லை.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II. CALLING ATTENTION TO LABOUR DISPUTE IN THE UNITED BLEACHERS (PRIVATE) LTD., COIMBATORE.

MR. SPEAKER : I have received notice from Sri S. Pakkirisami Pillai and Sri P. S. Chinnadurai, under rule 40 of the Assembly Rules, that they wish to raise a matter of urgent public importance. As per the rules, only one Member can raise the point. Sri P. S. Chinnadurai will raise the point. I allow him to raise the point in a short speech. 10–30 a.m.

SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குறிய சபாநாயகர் அவர்களே, மேட்டுப்பாளையம் யுனைடெட் பிளீச்சர்ஸ் நிர்வாகத்தினர் 144 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். தங்களை

[Sri P. S. Chinnadurai] [18th February 1959

வேலை நீக்கம் செய்தது சரியானது அல்ல—சட்டப்படி சரியானது அல்ல—என்று உயர்நீதி மன்றத்திலே வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். அந்த வழக்கு விசாரணையில் இருந்துகொண்டிருக்கும்போதே, யுனைடெட் பிளீச்சர்ஸ் நிர்வாகத்தினர் தொழிலாளர்களையெல்லாம் நீக்கி விட்டு, புது ஆட்களைக்கொண்டு திறந்து வேலை நடக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பழைய தொழிலாளர்கள் சிலரைக் குறைந்த சம்பளத்தோடு, பழைய ஸர்வீஸைச் சேர்த்துக்கொள்ளாமல், புது வேலை நிபந்தனையின்பேரில் வேலைக்கு எடுத்துக்கொண்டு சில பேர்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படி முதலாளிகள் நடந்துகொள்வது தொழில் அமைதியைக் கெடுப்பதாக இருக்கிறது. தொழில் அமைதியைக் கெடுக்கும் அத்தகைய நடவடிக்கைகளில் இறங்க வேண்டாமென்றும், தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கவேண்டாமென்றும் அரசாங்க அதிகாரிகளும் மற்றவர்களும் ஆலோசனை சொல்லிய போதிலும், அவர்களுடைய அறிவுரைகளை உதறித் தள்ளிவிட்டு, பழி தீர்க்கிற போக்கிலேயே நடந்துவருகிறார்கள் என்று தெரிகிறது. இப்படிப்பட்ட நிலைமையிலே, கோவை ஜில்லா பஞ்சாலைத் தொழிலாளர்கள் மாநாடு சமீபத்திலே கூடி முதலாளிகளின் பழி தீர்க்கும் நடவடிக்கையை எதிர்த்து, தொழிலாளர்களுக்கு ஆதரவு காட்டுகிற முறையிலே முதலாளிகள் பேரில் சரியான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் இல்லையானால் சத்தியாக்கிரகப் போராட்டத்தைத் துவக்க வேண்டுமென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். இந்த சத்தியாக்கிரகப் போராட்டத் தீர்மானமும், முதலாளிகளுடைய பழி தீர்க்கும் போக்கும், கோவை வட்டாரத்திலே பெருத்த பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையைச் சமாளிக்க நல்ல பலன் அளிக்கத் தக்க முறைகள் பலவற்றை அரசாங்கம் மேற்கொள்ளலாம். சுலபமாக நிர்வாகத்தினரை அரசாங்கம் சொல்லுகிற அறிவுரைக்குக் கட்டுப்படச் செய்வதற்கு அரசாங்கத்திடம் அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்தை உபயோகித்து அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள், பலன் அளிக்கத் தக்க முறையிலே என்ன செய்யப் போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

* THE HON. SRI R. VENKATARAMAN : Sir, 144 workers employed in United Bleachers (Private), Limited, Mettupalayam, staged a stay-in-strike in the night of 23rd September 1958 protesting against the promotion of a junior worker to 'A' Grade post in the Folding Section. The stay-in-strike continued on the 24th September 1958. The management by a notice, dated 23rd September 1958 informed the workmen that they were staging a lightning stay-in-strike thereby creating a situation which might result in damage to the cloth which was under process. The workers were also informed by that notice that their strike was in contravention of standing orders 30 (2) and (3) of the company and was also illegal. The management requested the workers to resume work immediately and to avoid damage to materials which was in process. By another notice, dated 24th September 1958 the workers were informed by the management that they would be forced to take steps under standing order No. 30, if the workers did not resume work immediately.

The Labour Officer held conciliation and on his advice, the workers agreed to resume work from the beginning of the second shift on 25th September 1958. The management had, however, already issued notice to the workers individually terminating their services.

18th February 1959] [Sri R. Venkataraman]

The parties discussed the situation with the Minister (Home), then in charge of Labour, on 6th October 1958. The Minister suggested to the management that it would not be correct to dismiss all the workers and advised the parties to settle the matter amicably.

The management put up a notice on 8th October 1958 stating that they would be lifting the lock-out, that the factory would work with a new set of workers under new service conditions, and that preference would be given to old workers at the discretion of the management, provided the workers expressed regret in writing for their misconduct in staging the stay-in-strike from 23rd September 1958 to 26th September 1958. The Labour Officer contacted the management on 8th October 1958 and was informed by them that their stand already taken was final. The Government examined the question and referred for adjudication the issue whether the dismissal of 144 workers was justified and, if so, to what relief they were entitled.

The Labour Court, Coimbatore, gave an award holding that the management was justified in dismissing the workers and that therefore the workers were not entitled to any relief. The Labour Court observed that the workers were guilty of misconduct by reason of their illegal strike under the standing orders of the company. The Labour Court also expressed the hope that the management would keep open their offer to take back the workers who expressed regret for their action and entertain such workers accordingly.

Subsequently, the Minister (Industries) discussed the situation with the parties at Coimbatore on 26th January 1959. He advised the management to take back the workers; subject to the condition that the union agreed not to interrupt essential services in future even during any strike and that they would allow the workers engaged in such essential work to perform their normal duties on the management furnishing the union with a list of workers engaged in essential work. The Minister (Industries) also said that the workers would be asked to give individually a letter of apology. However, the management did not agree to the suggestion.

The Coimbatore District Textile Workers' Union, Singanallur, Coimbatore district, represented to Government on 5th February 1959 that the Union has filed a writ petition in the High Court against the award of the Labour Court and that the writ petition had been admitted. Representations were also made to Government that the management have started the working of the factory on 7th February 1959 with a new set of workers.

I may state that the Government have taken all possible action to bring about a settlement and to restore amicable relations in the factory. It is unfortunate that the management did not accept the advice of the Government.